[20th July 1957

இந்த advisory கமிட்டிகளின் கூட்டங்களைப் போடக்கூடாது என்றும், அந்த சமயத்தில் வரக்கூடிய கமிட்டிகளின் கூட்டங்களை ஒத்திவைக்க வேண்டும் என்றும் சர்க்கார் ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி முன்பே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கவனிக்கப்படும்.

SRI S. LAZAR : இதுபோன்ற குழுக்களில், ஐந்தாண்டுத் திட்டத்திலோ சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலோ நம்பிக்கையில்லாத கட்சிகளின் சார்பில் இருக்கும் அங்கத்தினர்களும் அங்கம் வகிப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பிரதேசங்களில் உள்ள எம்.எல்.ஏ.க்களை கட்டாயம் அங்கத்தினர்களாக எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் திட்டத்தில் நம்பிக்கை இல்லாத எந்தக் கட்சியும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : Sir, will the Hon. Minister introduce the Block Development Scheme in Tiruppattur taluk?

THE HON. SRI C. SUBRAMANIAM : This supplementary does not arise out of the main question.

MR. SPEAKER : There is no relation between the supplementary and the main question.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : நிர்மாண வேலைத் திட்டங்கள் நிறைவேற்றி வரும் தாலூகாக் காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசிகளும் இந்தக் கமிட்டிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசிகள் என்பதற்காக யாரும் இந்தக் கமிட்டிகளில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். இந்த அபிவிருத்தித் திட்டங்களில் அக்கறை எடுத்துக்கொள்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விதிகளில் இடம் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Sir, may I know on what basis the members are selected for the block advisory committees?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொன்னேன். அப்போது தமிழில் சொன்னேன். மறுபடியும், ஆங்கிலத்தில் பதில் சொல்ல வேண்டுமா என்று கனம் அங்கத்தினரைக் கேட்க விரும்புகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்கு எந்த அடிப்படையில் பிளாக்குகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் முன்பே பதில் சொன்னேன்.

Southern Regional Seminar of Key Village Officers

MR. SPEAKER : Question No. 154. I find the hon. Member Sri K. N. Palaniswami Gounder is not in his seat.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I put the question.

MR. SPEAKER : The hon. Member must be alert. Otherwise I will pass on to the next question.

20th July 1957]

* 154 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri K. N. Palaniswami Gounder) : Will the Hon. the Minister for Home be pleased to state the expenditure incurred towards travelling allowances and other expenses in respect of officials who participated in the First Southern Regional Seminar of Key Village Officers organized by the Animal Husbandry Department of the Government of Madras held on the 18th, 19th and 20th May 1957 at Coimbatore?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : An expenditure of Rs. 1,175 was incurred on the travelling allowance of the officers of the Madras Animal Husbandry Department who attended the Seminar. The State Government also incurred a further expenditure of Rs. 1,371 in connection with the arrangements made for the conduct of the Seminar.

Increase of prices on account of introduction of decimal coinage

* 155 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is rise in the prices of articles on account of the introduction of decimal coinage and if so, what steps have been taken to check such rise in prices?

The Hon. Sri C. SUBRAMANIAM : There has been a slight increase in the prices of certain articles due to the tendency on the part of the merchants to put up the prices slightly when they are converted into decimal system by rounding off the actual price generally to the next higher naya paise. It is not possible to take any action to check this small rise in prices.

Sri S. PAKKIRISAMI PILLAI : தசாம்ச நாணயங்கள் வந்த பிறகு அரசாங்கத்தின் ஆதரவில் உள்ள ஸ்தாபனங்களிலெல்லாம், அந்த ஸ்தாபனத்தார் பல விவகாரங்களில் நயா பைசா பின்னங்களை முழு நாணயமாகத் திருத்திக்கொண்டு மதிப்பை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குச் சாதகமான விவகாரங்களில் அப்படித் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கப்படும்போது அவர்கள் அப்படி செய்துகொள்ளவில்லை; குறைவாகவே கொடுக்கிறார்கள்; உதாரணமாக 3 அணா பஞ்சப்படி கொடுக்கும் விஷயத்தில் குறைவான கணக்கையே எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் மற்ற விவகாரங்களில் எடுத்துக்கொள்ளும் நாணய மதிப்பைப் போலவே தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கும்போதும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தார் கட்டளை இடுவார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : I may refer the hon. Member to my colleague in charge of Industries who will certainly look into the matter.

Sri M. P. SUBRAMANIAM : இந்தமாதிரி ஒவ்வொரு சாதாரணப் பொருள்களின் விலையிலும் புதிய காசின் பின்னம் ஒரு காசாக மதிக்கப்பட்டு, அந்த அளவுப்படி பணம் பொருள்களை வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக பல அத்தியாவசியமான பொருள்கள் விலை உயர்ந்திருக்கின்றன. இதன் விளைவாக வாழ்க்கைச் செலவுப் புள்ளி எவ்வளவு உயர்ந்திருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட முடியுமா?